# பொருநராற்றுப்படை சுட்டும் வாழ்வியல் செய்திகள்

**முனைவர் கோ. இரவிச்சந்திரன்**
தமிழ் உதவிப்பேராசிரியர், விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு - 637205, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

பொருநராற்றுப்படை சுட்டும் வாழ்வியல் செய்திகள் என்னும் இக்கட்டுரையில் தொல்காப்பியரின் விதி முன்னுரையில் சுட்டப்பட்டு பின் பொருநர்களின் வாழ்வியல் கூறுகளை பகுத்தாய்ந்து வறுமையில் வாழ்ந்த அவர்கள், எவ்வாறு வறுமை வாழ்வு நீங்கி வளமோடு வாழ்ந்தனர் என்றும், வறுமையிலும் செம்மையுடையவர்களாக வாழ்ந்தனர் என்றும் பொருநராற்றுப்படை பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான் பிறப்பு, வளர்ப்பு, ஆட்சி சிறப்பு, கரிகாலனின் விருந்தோம்பல் பண்பு, கரிகாலனின் வீரம், கொடைத்திறம் நுணுகி ஆராய்ந்து ஆய்வின் முடிவு தொகுப்புரையில் கூறப்பட்டுள்ளது. இறுதியாக இவ்வாய்விற்கு பயன்பட்ட நூல்கள் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி என்பர் சான்றோர். அவ்வகையில் பத்துப்பாட்டில் இரண்டாவதாக அமைந்துள்ள பொருநராற்றுப்படை 248 அடிகளைக் கொண்டது. ஆசிரிய அடியாள் தொடங்கி பின் வஞ்சியடி விரவி முடத்தாமக்கண்ணியார் என்னும் நல்லிசை புலவரால் இயற்றப்பட்டது.

பழந்தமிழர் தம் அகவாழ்வாயினும், புறவாழ்வாயினும் அவற்றிற்கு விதிகள் வகுத்திருப்பது தொல்காப்பியம் எனில் மிகையாகாது. அவ்வகையில் ஆற்றுப்படை நூல்களுக்குத் தொல்காப்பியம் வகுத்த விதியைச் சுட்டுவது நோக்கத்தக்கதாகும்.

"கூத்தரும் பானரும் பொருநரும விறவியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீ இச்
சென்று பயன் எதிர்ச் சொன்ன பக்கமும்"[1]

பொருநர்கள் படிப்பறிவில்லாதவர்கள், இவர்களுக்கு மன்னரைச் சார்ந்த தொழில்களோ, பிற தொழில்களோ இல்லை. இவர்கள், சிற்றரசர்கள், பேரரசர்கள், வள்ளல்கள் ஆகியோரைப் புகழ்ந்து பாடி அதன் மூலம் கிடைக்கும் பொருள் வளத்தால் வாழ்ந்து வந்தனர். எனவே புரவலர்களின் இருப்பிடம் நாடிச்செல்பவர்களாக இருந்தனர். இசைக் கருவிகளை வைத்து பாட்டிற்குப் பண் இசைக்கும் வல்லுநர்களாக விளங்கினர்.

**பொருநரின் வாழ்வியல் நிலை**

புரவலர்களின் புகழை இசைப் பாட்டால் பாடி உலகறியச் செய்பவர்கள் பொருநர்கள். மக்கள் வாழ்வின் பயனை அடைவதற்கு உறுதுணையாகிய கலைகளை உணர்வோரும், தாம் உணர்ந்தவற்றை பிறரும் உணர்த்த வல்லோருமே கலைஞர்கள் எனப்படுவர். கலையில் சிறந்து விளங்குபவராகிய பொருநர்கள் வாழ்வின் பெரும்பகுதி வறுமையில் உழல்பவர் புரவலர்களை நாடி அப்புரவலர்கள் எங்கிருப்பினும் அங்கு சென்று அவர்களை அடைவர். புரவலர்கள் அப்பொருநர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து பலநாட்கள் பழகியதைப் போன்று இன்முகம் இனிதே உபசரிப்பர்.

"முகத்தா னமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இச்சொ லினிதே அறம்"[2]

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப பயன்மரம் பழுத்தாற்றாற் போல் நல்கூர்ந்தாரை அறம் செய்து நயமுடன் காப்பாற்றினர் புலவர்கள்.

வறுமையுற்ற பொருநன், தன்னிலை தெரிந்து நெடுநாள் பழகிய கேளிர் போன்று உபசரித்து தன் வறமை ஒழித்தார் போல் அத்தனை பரிசில்களையும் தான் சென்றடைந்த புரவலரிடம் பெற்று மீண்டதை வழியில் கண்ட வறுமை மிக்க மற்றொரு பொருநனிடம் எடுத்துக்கூறி நீயும் அப்புரவலரிடம் சென்று பரிசில் பெற்று நின் வறுமையகற்று என்று புரவலரிடம் ஆற்றுப்படுத்துவதை ஆற்றுப்படை என்பர். நல்குரவு என்ற நிலையால் ஏற்படும் இழிநிலையை வள்ளுவர்.

"நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்"[3] (குறள்-1045)

என்கிறார்.

பொருநர், பாணர், விறலியர், கூத்தர் போன்ற கலைஞர்கள் செல்வ வருவாயுடைய ஊர்களில் நடைபெறும் விழாக்களில் இசைப்புலமையைக் காட்டிப்பின் ஊர் ஊராய் சென்று தம் கலைத் திறமையைக் காட்டும் வழக்கமுடையவர்கள். விழா முடிந்த பின் அங்கு வழங்கும் பெருஞ்சோற்றை விரும்பாது வேற்றிடம் சென்று அங்கே தம்புலமை காட்டி நிற்பர் இதனை,

"அறாஅ யாணர் அகன்தலைப் பேர்ஊர்,
சாறுகழி வழிநாள், சோறுநசை உறாஅது,
வேறுபுலம் முன்னிய விரகுஅறி பொருந![4]
என்ற அடிகளால் அறியலாம். விழா முடிவுற்ற
பின்னர் பெருஞ்சோறு வழங்கலை,
சாற யர்ந்தன்ன மிடாச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர்"[5]

என்னும் குறிஞ்சிப்பாட்டிலும் அறியலாம்.

பொருநரின் யாழிசை கடின உள்ளத்தைக் கூட மென்மைப்படுத்தும்.

பொருநர் இசைக்கும் யாழின் இன்னிசையை செவி மடுக்கும் வழிப்பறி கொள்ளையர்கள் கூட தங்களின் கயமைத்தன்மையும், கொடுஞ் செயலையும் விட்டொழித்து மனதை மென்மையடையச் செய்யும் வெற்றிக் கொண்டது. அவர்கள் இயற்றும் யாழின் இசைத்தன்மையை

"ஆறுஅலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவுஇன் பாலை"[6]

என்ற பொருஞர் ஆற்றுப்படை அடிகளாற் காணலாம்.

சேர சோழ பாண்டிய மன்னர்கள் தம் பகையுணர்வை அகற்றி ஒரு சேர அமர்ந்து தம்முடைய யாழிசை இன்பத்தை நுகர்வதாகப் பாவித்துக் கற்பனை நயத்துடன் பொருநர் தம் யாழில் பண்ணமைத்து இசைத்து மகிழ்வர்.

"முரசுமுழங்கு தானை, மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போல"[7]

என்ற பொருநர் ஆற்றுப்படை பாடல் வரிகளால் உணரலாம்.

**வறுமையிலும் செம்மை உடையவர்**

புரவலர்களைப் போலவே இரவலர்களும் பிறருக்குக் கொடுப்பதில் வள்ளல் தன்மை பெற்றவர்களாய் இருந்தனர். இதனை,

"தரவிடைத் தங்கல்ஓ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க்கு ஆர்த்தி"[8]

"நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்
ஒரும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னது என்னாடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே"[9]
(புறம்: 163)

என்ற வரிகளால் உணரலாம். பழுமரம் நாடிச் செல்லும் பறவை போன்றவர் பொருநன். பொருநராற்றுபடை காட்டும் பொருநன் (பரிசில் பெற்றவன்) பரிசில் பெறாத பொருநனைக் கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்தும் போது

"பழுமரம் உள்ளிய பறவையின் யானுமவன்"[10]

"இசையேன் புக்கு என் இடும்பை தீர"[11]

என்று கூறுகின்றார். வௌவால் முதலிய பறவைகள் பழுத்த மரம் நாடிச் செல்வது

போன்று நான் கரிகால் பெருவளத்தானிடம் சென்றேன். நீயும் செல் என ஆற்றுப்படுத்துகிறான்.

**பாட்டுடைத் தலைவன் கரிகாற் பெருவளத்தான் பிறப்பு வளர்ப்பு**

பொருநராற்றுப்படை நூலின் பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான் புலவர்க்கும், பொருநருக்கும், பாணருக்கும், கூத்தருக்கும் புரவலனாய் புகலிடமாய் திகழ்ந்தான். இவன் தந்தை உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி என்னும் அரசனின் அருமை மைந்தனாவான். இதனை

"உருவப் ப∴றேரிளை யோன் சிறுவன்"[12]

எனவரும் அடியிற் காணலாம்.

கரிகாற் பெருவளத்தான் தன் தாய் கருவிலிருக்கும் போதே தந்தை இறந்துபட கருவிலிருக்கும் காலத்தே அரசுரிமை பெற்றுப் பின்னர் பிறந்தான். இதனை,

"தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப"[13]

என்ற வரிகளால் அறியலாம்.

**கரிகால் பெருவளத்தானின் வீரம்**

கரிகால் வளவன் தாயின் கருவில் இருக்கும் போதே தாயமெய்த்தால் இவன் உற்றார் உறவினர் மற்றவர் எனப் பல பகைவரின் அரசுரிமையைக் கைப்பற்ற முனைந்தனர். இவன் இளைஞனாய் இருந்த போதே வீரதீரத்துடன் வெஞ்சமர் புரிந்து வெற்றி கண்டான். வெண்ணிப் பரந்தலை என்னும் இடத்தில் சேர பாண்டியர் இருவரையும் ஒரு சேர வென்று வாகை சூடினான். என்பதை,

இரு பெருவேந்தருக்கு மொரு களத்தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணி கரிகால் வளவன்"[14]

என்ற வரிகளாற் அறியலாம்.

கரிகாற் சோழனின் அரசைக் கைப்பற்றிட எண்ணி இளம் வயதில் பகைவர் இவனைச் சிறையிலிட்டனர். அச்சிறைக்கூடத்தை தீயிட்டுக் கொளுத்தினர். தீப்பற்றிய சிறைக்கூடத்திலிருந்து கரிகாலன் தப்பி வெளியேறினான். அம்முயற்சியில் அவன்கால் வெந்து கரிக்கட்டையாயிற்று அதன் காரணமாக அம்மாவீரன் கரிகாலன் என்று அழைக்கப்பட்டான். இதனை,

"முச்சக்கரமு மனப்பதற்கு நீட்டிய கால்
இச்சக்கரமெ அளந்ததால் - செய்ச்செய்
அரிகான் மேற்றேன் றொடுக்குமாய் புன்னீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று"[15]

என்னும் பொருநராற்றுப்படை வெண்பா மூலம் அறியலாம்.

**கரிகாற் பெருவளத்தானின் விருந்தோம்பற் சிறப்பு**

உறவினர்களுக்கும் உறவினரல்லாதார்க்கும் பேதம் பார்க்காது தன்னை நாடிவரும் வறுமையுற்றவர்கள் அனைவருக்கும் அளவில்லாது மழையைப் போன்று வாரிவழங்கும் தன்மையை உடையவன் கரிகாற் பெருவளத்தான் புலவர்க்கு வழங்கும் இன்முகத் தோற்றமும் நன்குடையான் இதனை,

"கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறல்அருங் கலத்தில் பெட்டாங் குண்கென
பூங்கமழ் தேறல் வாக்குபு தரத்தர,
வைகல் வைகல் கைகவி பருகி"[16]

என்ற வரிகளால் உணரலாம்.

**கரிகாலனின் கொடைத்திறம்**

இவ்வுலக மக்கள் அன்புடனும், நட்புடனும் இருப்பதைச் செம்மையான நூல்கள் சுட்டி வந்துள்ளன. தமிழர்களின் தலை சிறந்த பண்பான வரவேற்றல், விருந்தோம்பல் போன்றவற்றை இந்நூல் மூலம் படிப்பது உவகையினை ஏற்படுத்துகிறது. அத்தகைய சிறந்த பண்பினைக் கொண்டவனாகிய கரிகாலன் தக்க காலத்தை அறிந்து பொருநர்களின் பசி நீக்கினான் என்ற செய்தி,

"அதன்முறை கழிப்பிய பின்றை, பதன்அறிந்து,
துராஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்
பராஅரை வேவை பருகு எனத்தண்டிக்"[17]

என்பதின் மூலம் விருந்தோம்பலின் தலைவனாகக் கரிகாலன் திகழ்ந்ததை உணர்த்துகிறது.

மேலும் பசியால் வாடிய பொருநர் கூட்டம் இன்சோறு உணவினை மிகையாயக் கொண்டு உணவையே வெறுத்த நிலையினையும் அதனால் பற்கள், நிலத்தை உழுத கொழுவினைப் போன்று மழுங்கிய நிலையினை,

"கொல்லை உழுகொழு ஏய்ப்ப பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி,
உயிர்ப்பிடம் பெறாஅது ஊண்முனிந்து"[18]

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும், மன்னன் துடியைப் போன்ற அடிக் கொண்ட கன்றுகளோடு கூடிய ஆண் யானையினையும், விரும்பிய பொருள்களையெல்லாம் கொள்க என்றும் கூறுகின்றான். அவையின்றி, ஊர்திகள், ஆடைகள், அணிகலன்கள் முதலியவற்றை வேண்டுமளவிற்கு வழங்கியதை,

"துடிதுடி அன்ன தூங்குநடைக் குழவியோடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க எனத்
தன்அறி அளவையின் தரத்தர யானும்"[19]

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இவ்வாறான பரிசுப்பொருள்கள் பெற்ற பொருநர்கள் தாம் விரும்பியவற்றை எவ்வாறு எடுத்துக் கொண்டனர் என்பதை,

"என்அறி அளவையின் வேண்டுவன முகந்து
கொண்டு
இன்மை தீர வந்தனென்"[20]

என்றும் பொருநராற்றுப்படைச் சிறப்பிக்கின்றது. மேலும் இக்கொடைக்குணம் வாய்க்கப் பெற்ற கரிகாலன் தன்னை நாடி வருபவர்கள், தன்னைவிட்டு அகலாது இருக்க வேண்டும் என்பதில் விருப்பமுள்ளவன் என்ற தன்னிகரற்ற சிந்தனையை,

"வல்லே அகறிரோ எம்ஆயம் விட்டு?' என
சிரறிய வன்போல் செயிர்த்த நோக்கமோடு"[21]

என்ற வரிகள் பெருமைப்பட வைக்கின்றன.

## தொகுப்புரை

பொருநராற்றுப்படை வாழ்வியல் செய்திகளைச் சுட்டுகின்றது. பொருநர் யாழ் என்ற இசைக்கருவியை இசைப்பதில் வல்லவர்கள். தாங்கள் வறுமையுற்றிருந்தாலும் பிறருக்கு வழங்கி செம்மையான வாழ்வு வாழ்பவர்கள். கரிகாற் பெருவளத்தானின் புலவர்களுக்கு வழங்கும் ஈகைத்திறனையும், அவனது பிறப்பு, வீரர் ஆட்சித்திறம் ஆகியவை சுட்டப்பட்டுள்ளது. தமிழர்களின் விருந்தோம்பற் பண்பு கரிகாலனிடம் மிகுந்திருந்தது சுட்டப்படுகிறது. இறுதியாக கரிகாலன் சேர பாண்டியரை வெண்ணிப் பரந்தலை போரில் வென்றமை சுட்டப்படுகிறது. மழையைப் போன்று வாரி வழங்குபவன் என்பதும் புலனாகிறது.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், தமிழண்ணல், ப.எண்.111, 2006, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்
2. திருக்குறள், கண்ணன் தம்பிரான், ப.எண். 18, 2018, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
3. மேலது, ப.எண். 114, 2018, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
4. பத்துப்பாட்டு மூலமும் உரையும், இரா. மோகன், ப.எண். 80, 2017, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
5. பத்துப்பாட்டு மூலமும் உரையும், அ.மாணிக்கனார், ப.எண். 110, 2000, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
6. பத்துப்பாட்டு மூலமும் உரையும், இரா. மோகன், ப.எண். 80, 2017, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
7. மேலது, ப.எண். 82, 2017, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

8. மேலது, ப.எண். 87, 2017, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

9. புறநானூறு, புலியூர் கேசிகன், ப.எண். 214, 2007, பாரிநிலையம், பிராட்வே, சென்னை.

10. பத்துப்பாட்டு மூலமும் உரையும், இரா. மோகன், ப.எண். 82, 2017, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

11. மேலது, ப.எண். 82, 2017

12. மேலது, ப.எண். 86, 2017

13. மேலது, ப.எண். 86, 2017

14. மேலது, ப.எண். 86, 2017

15. மேலது, ப.எண். 18, 2017

16. மேலது, ப.எண். 87, 2017

17. மேலது, ப.எண். 84, 2017

18. மேலது, ப.எண். 85, 2017

19. மேலது, ப.எண். 85, 2017

20. மேலது, ப.எண். 85, 2017

21. மேலது, ப.எண். 85, 2017